1994 மார்ச் 29]

138—

கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்.

***13318*—திரு ஜி. பழனிசாமி :**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், பெரிய ஊராட்சி ஒன்றியமாக இருப்பதால், பெருகவாழ்ந்தானை மையமாகக் கொண்டு இரண்டாகப் பிரிப்பதற்கு அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆமெனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

முற்பகல் 11-10

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை-காயிதே மில்லத் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம் 48 ஊராட்சிகளைக் கொண்டிருக்கிற ஒரு பெரிய ஊராட்சி ஒன்றியமாக அமைந்து இருக்கிறது. ஏற்கெனவே இதற்கான செயற் குறிப்பு அரசிடத்தில் இருக்கிறது. பெருகவாழ்ந்தானை மையமாகக் கொண்டு 20 ஊராட்சிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியம் அமைக்கின்ற பணியை மேற்கொண்டு, இடையிலே தடைபட்டு இருப்பதாக நான் கருதுகிறேன். இதோடு சேர்ந்த நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம் கீவளூரை மையமாகக் கொண்டு ஒன்று பிரிக்கப்பட்டுவிட்டது. அதோடு சேர்ந்து இது பிரிக்கப்பட செயற்குறிப்பு அரசிடத்தில் இருந்த காரணத்தினால், இதை மீண்டும் அரசு பரிசீலிக்குமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பிரச்சினைதான், நேற்றைக்கும் இரண்டு ஊராட்சிகளைப் பிரிப்பது சம்பந்தமாக வந்தது. அதிலேயே தெளிவாகச் சொல்லி இருக்கின்றேன். தற்பொழுது பெறப்பட்டு இருக்கின்ற இந்திய அரசியல் அமைப்பு 73-வது திருத்தச் சட்டத்தின்படி தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியங்கள் சட்டம், 1958 திருத்தி அமைக்கப்பட உள்ளது. அப்படித் திருத்தி அமைக்கின்றபொழுது பல்வேறு நிர்வாக மாற்றங்கள் அதிலே உருவாகி இருக்கின்ற காரணத்தினாலே, தற்போது அப்படி பேரூராட்சிகளை அமைத்தலோ அல்லது பிரித்தலோ அல்லது தரத்தை உயர்த்துகின்ற நிலையையோ

உருவாக்கினால், நிர்வாக மாற்றங்கள் உருவாகும். அதிலே தற்போது சாத்தியக்கூறு இல்லை என்ற காரணத்தினாலே, இந்த சட்டத் திருத்தத்தை மேற்கொண்ட பிறகு நிச்சயமாக அரசு அதில் கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, அந்தச் சட்டத் திருத்தம் வந்த பிறகுதான்—நேற்றையதினமும் இதேமாதிரிதான் ஒரு கேள்விக்குப் பதில் சொன்னார். இப்போது நீங்கள் என்ன கேட்டாலும், அந்தச் சட்டத் திருத்தம் வந்தால்தான்—அதிலே மேற்கொண்டு பரிசீலிக்க முடியும்.

வினா எண் 139. திரு. நா. சா. பழனிசாமி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

139—

பொள்ளாட்சி ஒன்றியம், இராமபட்டினத்திலிருந்து மாப்பிள்ளைக் கவுண்டன்புதூர் வரையுள்ள சாலையைத் தார்ச் சாலையாக மாற்றுதல்.

***11122**—திரு. நா.சா. பழனிசாமி:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், இராமபட்டினத்திலிருந்து வடக்கே மாப்பிள்ளை கவுண்டன்புதூர் வரை உள்ள மிகவும் பழுதடைந்த சாலையை தார்ச் சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள சாலை 1991-92 மற்றும் 1992-93 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய எடுத்துக்கொள்ளப்பட்டு, 29-9-1993 அன்றே பணி முடிவடைந்துள்ளது.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை நான் போட்டிருந்த காலத்திலே, அந்தச் சாலை வேலை துவங்கப்படாமல் இருந்தது. இன்றைக்கு அந்தச் சாலை தார்ச் சாலையாக மாற்றப்பட்டு இருப்பதை நானும் அறிவேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தச் சாலையை தார்ச்சாலையாக மாற்றிக் கொடுத்ததற்கும் நான் எனது சார்பிலேயும் எனது தொகுதி மக்கள் சார்பிலேயும் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே சாலைக்குத்தான் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரிடத்திலும் ஒரு பாலம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை இதற்கு முந்தைய கேள்வியிலே சொல்லி இருந்தேன்.